ஸ்ரீ:

கடவுள் துணை.

திருத்தக்கதேவர்

இயற்றிய

# நரிவிருத்தம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

முந்திய "செந்தமிழ்"ப் பத்திராசிரியர்

## மு. இராகவையங்காரால்

அரும்பதவுரை யெழுதி வெளியிடப்பெற்றது.

"செந்தமிழ்" ப்பிரசுரம் - ௨0;

(௨-ஆம் பதிப்பு)

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1920.

# நரிவிருத்தம்

## முகவுரை.

நரிவிருத்தம் என்பது நரியைப்பற்றிய பாடல்களாலானதொரு நூல் எனப்பொருள் படும். விருத்தம்-யாப்பு. அன்றி, விருத்தம் என்பதற்கு விர்த்தாந்தம் அல்லது கதை யென்று பொருள்கொண்டு நரியின் கதையினைக் கூறும் நூல் எனக் கொள்ளினும் பொருந்தும். இந்நூலிற் கூறப்படும் நரிக்கதையாவது:—வேடனொருவன் மலைப்பக்கத்தே தினைப்புனத்தை அழித்துநின்ற யானையைக் கொல்லவேண்டி, ஒருபுற்றின்மேல் ஏறிநின்று வில்லைவளைத்து அதன் மஸ்தகத்தில் அம்பையெய்ய, அதுபாய்ந்ததால் யானை மிக்கசினத்துடன் எதிர்த்து, நெற்றியிலுருவிய அம்புடன் அப்புற்றைத்தாக்கித் தானும் வீழ்ந்திறந்தது. அவ்யானையின் தாக்கால் அப்புற்றிலிருந்த நாகம் வெளியேறிச் சினந்து அங்குநின்ற வேடனைச் சீறிக்கடிக்கவும், வேடனும் வெகுண்டு தன்வாளையுருவி அந்த நாகத்தை இருதுண்டமாகச் சேதித்துத் தானும் இறந்தான். இவ்வாறு தினைப்புனத்தையழித்த யானையும் யானையையெய்த வேடனும் வேடனைக்கடித்த பாம்பும் ஒருசேர இறந்துகிடத் தலைப் பக்கத்தே கண்டிருந்த ஒருநரி மிக்க மகிழ்ச்சியுடன் "ஆ! நமக்கு நிரம்பவும் உணவு குவிந்துவிட்டன; யானை ஆறுமாதத்துக்கும் வேடன் ஏழுநாட்கும் நாகம் ஒருநாட்கும் ஆகாரமாகும்" என்று பலவாறு நினைந்து அப்பிணங்களின் அருகேவந்து, முதலில் வீழ்ந்துகிடக்கும் வேடன் கைவில்லின் குதைவாரைக் கடித்துண்ணத் தொடங்கவும் அவ்வாரறுந்துபோக வில்லு விசையாக நிமிர்ந்து, கடித்த நரியின் வாய்க்குட் கோத்துக்கொண்டமையால் நரியும் விரைவிற் செத்தது. இக்கதை போன்றதே உலகவாழ்வும்" என்பது. இச்சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பலநீதிகளும் உவமைக்கதைகளும் இந்நூலுட் கூறப்படுகின்றன. இந்நூல் இயற்றியவர் "வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய, பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்"*க்காப்பியமென்று சிறப்

பிக்கப்படும் சீவகசிந்தாமணியை இயற்றியவராகிய திருத்தக்கதேவர் என்னும் புலவர் பெருமானேயாவர். இந்நரிவிருத்தத்தைத் தேவர் பாடியதன் வரலாறுவது:—†திருத்தக்கதேவர் சீவகன் சரித்திரத்தைப் பெருங் காப்பியமாகப் பாடத்துணிந்து, தமதெண்ணத்தைத் தம்மாசிரியர் பாற்சென்று விண்ணப்பிக்க, ஆசிரியரும் அவ்வாறுபாடுவதிற் றம் மாணுக்கர் வல்லுநராயிருத்தலை நன்குணர்ந்தவராயினும், மாணுக்கர் கருத்தை அளந்தறிய ஆலோசித்திருக்கும் பொழுது; அவ்விருவர்க்கு மிடையே ஒருநரியானது ஓட, அதனைக்கண்ட ஆசிரியர் மாணுக்கரை நோக்கி "இந்நரிச்சாதித்தன்மையை ஆதாரமாகக் கொண்டு உமக்குத் தோற்றியவாறே ஒரு சிறியநூல் இயற்றுதிர்" என்றுகூற, திருத்தக்க தேவரும் அவ்வாணைப்படியே நரியை ஆதாரமாகக்கொண்டு யாக்கை நிலையாமை செல்வநிலையாமை முதலியவைகளெல்லாம் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதிற் புலப்படும் வண்ணம் விரைவில் "நரிவிருத்தம்" என்னும் ஒரு நூலியற்றி ஆசிரியர்க்குக் காட்டவும் ஆசிரியர் பெரிதும் வியப்புற்றுச் சிந்தாமணியைப் பாடும்படி கட்டளையிட்டனர்"—என்பது. இவ்வாறு திருத்தக்கதேவரால் நரிவிஷயத்துக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கதை அவராற் புனைந்துரைத்ததன்றிப் பழமையானதாகவே தெரிகின்றது. வடமொழியிலுள்ள பழைய நூலாகிய ஹிதோபதேசத்தே ‡ மித்திரலாபமென்னும் பகுதியில் வியாத மிருக சூகர சர்ப்ப சிருகாலர்கள் கதை என்பதொன்று கூறப்பட்டுள்ளது. (வேடன் மான் பன்றி பாம்பு நரி-இவற்றின்கதை என்பது பொருள்) இதனுட்கண்ட வரலாறு நரிவிருத்தக்கதையுடன் பெரும்பாகம் ஒத்துச் சிறுபான்மையே வேறுபாடு கொண்டுளது. இதோபதேசத்துக் கண்ட வரலாறுவது:—பைரவன் என்னும் வேடன் ஒருமானை எய்துகொன்று அதனையெடுத்துக்கொண்டு வரும் வழியில் ஒரு பன்றியைக்கண்டு, அதனை அம்பாலெய்ய அது மிக்க சினத்துடனெதிர்த்து அவ்வேடனது முஷ்கதேசத்தில் அடித்து அவனைக்கொன்று தானும் இறந்தது; அவ்விருவரும் காலடித்து உதறியதனல் இடையில் அகப்பட்ட பாம்பொன்றும்

* நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம்.

† சீவகசிந்தாமணிப் பதிப்பிலுள்ள திருத்தக்கதேவர் வரலாற்றைக்காண்க.

‡ இது, வடமொழியினின்று தமிழில் சுன்னாகம் ஸ்ரீ: நாகநாதபண்டிதரால் மொழிபெயர்க்கப்பட்டு, ஷெயூர் வித்வான் ஸ்ரீ: அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் 1886-ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது.

இறந்தது; அப்போது உணவின் பொருட்டுச் சுற்றித்திரிந்த தீர்க்கராவன் என்னும் நரி, இறந்துகிடக்கும் மான் வேடன் பாம்பு பன்றி என்ற நான்கையுங்கண்டு 'ஆ! எனக்கு இன்றைக்கு நல்லபோஜனங் கிடைத்திருக்கிறது; ஒரு மாசத்துக்கு வேடனுடைய மாமிசம் போதும்; இரண்டு மாசங்களுக்கு மானும் பன்றியும் போதும்; பாம்பு ஒரு தினத்துக்குப் போதும்; இப்போது இந்த விற்குதையில் ஒட்டியிருக்கும் வார்க்கயிற்றை உண்பேன்' என்று சொல்லி அவ்வாறே செய்ய, அப்போது வார்க்கயிறு அற்றுப்போக வில்லுவிசையாய் மேலே நிமிர்ந்து அந்நரியின் நெஞ்சைப்பிளக்க அதனால் அந்தத் தீர்க்கராவனென்னும் நரி உயிர் விட்டது"—என்பது. இக்கதைக்கும் நரிவிருத்தக்கதைக்குமுள்ள சிறுவேறுபாடுகள் நோக்கிக்கொள்க. இக்கதையே, திருத்தக்கதேவரால், பன்றியை யானை என்றது முதலிய சிலவிஷயங்கள் மாற்றிப் பாடப்பட்டதென்று நாம் கருத இடமுண்டாகிறது.

இந்நூல் "உவமைக்கதை நீதி நரிவிருத்தம்" என்னும் அடையுடன் ஒரு பிரதியிற் காணப்பட்டது. இது, காப்பை நீக்கி ஐம்பது பாடல்களுடையது. இவற்றுள் நரியின் விருத்தாந்தம் கூறும் பாடல்கள் எட்டேயாம். ஏனையவற்றில், இக்கதையை ஆதாரமாகக்கொண்டு நீதிகளும் அந்நீதிகட்கேற்ற பல கதைகளும் கூறப்படுகின்றன. இந்நூலுள் வருங்கதைகள் பதினெட்டு; அவை முழுதும் ஜைனமதசம்பந்தமானவைகளேயாம். இந்நூலின் வாக்குச் சிந்தாமணி வாக்கோடு பெரும்பான்மை ஒத்ததென்னலாம். யாக்கை செல்வங்களது நிலையாமையும், பொய் கொலை களவு கட் காமம் என்பவற்றால் அழிந்தவர்கதைகளும் அவையின்றியுயர்ந்தோர் சரிதங்களும், யதிதர்மசிராவகதர்மங்களது பெருமையும், பிறதர்மவிஷயங்களும் இதனுள் அடங்கியுள்ளன.

இவ்வாறு, நீதிபுகட்டும் சில சிறுகதைகளை ஆதாரமாகக்கொண்டு பல அரிய விஷயங்களைப் பாடுமுறை பழங்காலத்தில் வழங்கியதேயாம். இந்நரிவிருத்தம்போலவே, கிளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் வேறு நூல்களும் ஜைனர்களாற் பாடப்பட்டு வழங்கிவந்தன. இவ்விஷயம், வீரசோழியம், யாப்புப்படலம், உக-ம் பாடலுரையில் "குண்டலகேசி விருத்தம் கிளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்த முதலாயுள்ளவற்றிற் கலித்துறைகளும் உளவாம்" என்னும் வாக்கியத்தால் விளங்கும். இவ்விருத்தங்களெல்லாம், திருஞான சம்பந்தமூர்த்திகள் திருநாவுக்கரச

ரென்னும் சைவசமயாசாரியர் காலத்துக்கு முன்பே செய்யப்பட்டவை என்பதும், அவர்கள் நாளிலே, ஜைனர்களால் எப்பொழுதும் அவை பாராயணஞ் செய்யப்பட்டுவந்தன என்பதும், முறையே, திருவால வாய்த்திருப்பதிகத்தும் ஆதிபுராணத்திருக்குறுந்தொகைப் பொதுப்பதி கத்தும் வருகின்ற,

"கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரெலியின்றொழிற்
பாட்டுமேசொலிப்பக்கமேசெலுமெக்கர் தங்களை"

"எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே"

என்னும் பாசுரங்களால் நன்குதெளியப்படும். இவற்றுள், பின்ன தில்வரும் 'நரிவிருத்தமதாகுவர்' என்பது 'நரியின் விருத்தாந்தத்தினை யுடையராகுவர்' என்று பொருள் தருவதாயினும், அந்நரிவிருத்தாந்த மும், கிளிவிருத்தம் எலிவிருத்தம்போன்றதோர் நூலினின்றே அக் காலத்துப் பிரசித்தமாக வழங்கியதென்றும், சுவாமிகளும் அவ்வாறு பிரபலமாயிருந்த நரிவிருத்தத்தின் வழக்கைக்கருதியே அங்ஙனம் பாடி னாரென்றும் கொள்ளக்கிடக்கின்றது. ஏனெனில், உடனொத்த கிளி எலிவிருத்தங்கள் தேவாரத்துட்பயில்கின்றனவாதலின்.

இந்நரிவிருத்தம் இக்காலத்து அருகிய நூலாயிருப்பினும், இத னுட் கூறப்பட்ட நரிக்கதை இந்நாட்டில் பண்டிதர் பாமரர் எல்லாரும் தெரிந்திருந்ததாகவே வெளியாகிறது. நம்மவரிற் பெரும்பாலார்க்கு, தாம் சிறுபருவத்தே கற்ற,

"கரியொரு திங்க ளாறு கானவன் மூன்று நாளாம்
இருதலைப் புற்றி னாக மின்றுணு மிரையா மென்று
விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக் கவ்வி
நரியினார் பட்ட பாடு நாளைநாம் படுவோ மன்றே."*

என்னும் நீதிப்பாடல் இன்னும் ஞாபகத்திலிருக்கக்கூடும். இப் பிரசித்தமானபாட்டு, நரிவிருத்தக்கதையின் முடிவையே கூறுவதோடு, அந்நூலில்வரும் "களிறறுதிங்கட்காகும்" என்னும் செய்யுளின் சொற் பொருள்களையும் அநேகமாகக் கொண்டுளது.

இனி, மேற்கூறியவாறு, வீரசோழிய உரைவாக்கியத்தில், கிளி எலி நரிவிருத்தங்களில் கலித்துறைகளும் உளவாம் என்னும் விஷயங் கூறப்படுகிறது. ஆனால், நரிவிருத்தத்தே கலித்துறையொன்றும் காணப்பட்டிலது. இதனால், அக்கலித்துறைகளையுடைய கிளி எலிவிருத்தங்களோடு, அஃதில்லாத நரிவிருத்தமும் தவறாகச் சேர்க்கப்பட்டதென்றேனும், நரிவிருத்தத்தே கலித்துறைப்பாடல்கள் சிலவிருந்து பின்பு சிதைந்தன என்றேனும் கொள்ளும்படி நேருகின்றது. வெவ்வேறிடங்களிலிருந்து எனக்குக்கிடைத்த நரிவிருத்தப் பிரதிமூன்றும் முடிந்த நூலாகவும் ஈற்றுவாழ்த்துடனும் உள்ளமையால், முன்னதான ஊகம் பொருத்தமுடையதுபோல் எனக்குத் தோன்றுகின்றதாயினும் உண்மை தெளிவாகவில்லை.

இந்நரிவிருத்தப்பிரதியொன்று தம்மிடமிருந்ததை எனக்கு அன்புடனனுப்பிச் "செந்தமிழில்" வெளியிட்டுக்கொள்ளும்படி உபகரித்தவர் ஸ்ரீரங்கத்தில் வசிக்கும் பண்டிதர்- ஸ்ரீ: பி. ஆர். கிருஷ்ணமாசாரியரவர்கள். இவர்களாற்கிடைத்த இந்நூலை வேறு பிரதிகளுடனும் வைத்து ஆராய்தல்வேண்டி, என் நண்பர்களாகிய மன்னார்குடி மிஷன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-சர்க்கரை: இராமசாமிப் புலவரவர்களையும், ஆரணி: ஸ்ரீமத்-சந்திரநாதநயினார் அண்டுப்ரதர்ஸ் அவர்களையும் உசாவினேன். இவர்கள் பெரிதும் சிரமமெடுத்து அப்பக்கத்து ஜைனகிருகங்களிலிருந்த நரிவிருத்த ஏடுகளினின்று பிரதிகள் எழுதியனுப்பினார்கள். இன்னோர்களுடைய செய்யாமற்செய்ததும், காலத்தினாற்செய்தனவுமான நன்றிகட்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! இந்நரிவிருத்தத்து வரும் ஜைனகதைகள் பெரும்பாலவும், இச்சங்கத்துள்ள மணிப்பிரவாள நடையினதாகிய ஸ்ரீபுராணம் (முதற்பகுதி), உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய ஜீவஸம்போதனை, தமிழ்மேருமந்தர புராணம், அருங்கலச்செப்புரை என்னும் ஜைனகிரந்தங்களால் நன்குவிளங்கின. சில கதைகள், அவற்றிற்குரிய நூல்கள் இங்கின்மையால் விளங்கக்கூடவில்லை. அதுபற்றி, தமது மதவாராய்ச்சியிற் றேர்ந்தவர்களான வீடூர்: ஸ்ரீமத்-அப்பாசாமி சாஸ்திரி

---

* விவேகசிந்தாமணி என்றபெயருடன் வழங்கும் ஒரு பலதிரட்டச்சுப்புத்தகத்தும் இப்பாடலைக் காணலாம்.

யவர்கட்கு எழுதிக்கேட்ப, அவர்கள், என் வேண்டுகோட்படியே, விளங்காத கதைகளையெல்லாம் சுருக்கமாக எழுதி அன்புடன் அனுப்பினார்கள். இவர்கள் உபகாரம் என்றும் என்னால் மறக்கத்தக்கதன்று. இவ்வாறு கதைகள் முழுதும் ஒருபடியாக விளங்கினமையால், இச்சிறு நூலுக்கு அரும்பதவுரை யொன்றெழுதி, என் சிற்றறிவிற்குத்தெரிந்தவைகளை அதனுள் விளக்க முயன்றுள்ளேன். இந்நூற்பதிப்பிற் காணுங் குற்றங்குறைகளை அறிஞர் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்.

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்.

---

ஸ்ரீ:

கடவுள் துணை.

# நரிவிருத்தம்.

## காப்பு.

பானிலா மதிய மூன்று பன்மணி மிடைந்த பாங்காய்
மேனிலா விரித்த போலும் விளங்குமுக் குடையி னீழல்
தேனவாங் குளிர்கொள் பிண்டிச் செல்வன்சே வடியை வாழ்த்தி
யூனவா நரியினார்த முரைசிறி துரைக்க லுற்றேன்.

## நூல்.

சென்றுயர் மதிய முட்டுஞ் சிகரமால் வரைகள் சூழ்ந்த
குன்றியிற் குறவர் வாழுங் குறிச்சியுள் ளானோர் வேடன்
கன்றியூன் கிழங்கு காய்தேங் கனியொடு தேன்க டுய்ப்பான்
நன்றியில் செய்கை தம்மால் நாரகர் தம்மோ டொப்பான். (க)

வாங்குவிற் கலப்ப வீசி வளைகடன் முகந்து வானம்
பாங்கினா லெழுந்து மின்னிப் படுமழை பொழிந்த காலைத்
தேங்கமழ் சிலம்பின் வாழுங் குறவர்கள் நறவு மாந்தி
வேங்கைபூ விரித்த நன்னாள் விளைவுநாட் செய்ய லுற்றார். (உ)

---

**காப்பு.** அமுதகிரணங்களைக்கொண்ட மூன்று சந்திரர், பலமணிகள் நெருங்குதலால் உண்டான அலகினையுடையராய், ஆகாயத்தினின்று ஒளியைப்பரப்பியதுபோல விளங்கும் முக்குடையென்க. தேன் அவாம்-வண்டுகள் விரும்பும். பிண்டிச்செல்வன் - அருகன்; ஈண்டு ஒருசொல். ஊன் - மாமிசம். கரியினார் - இழித்தற்கட்சிறப்பு.

**நூல். க.** சிகரம் - கொடுமுடி. குன்றி - மலை. குறிச்சி - மலைநாட்டூர். கன்றுதல் - பழகிமுதிர்தல். நன்றியில் செய்கை, உடையானதுகுற்றம் செய்கைமேலேற்றப்பட்டது. நாரகர் - நரகலோகவாசிகள்.

உ. வாங்கு வில் - வளைந்த இந்திரவில். வேங்கை மலருங்காலம் தினைகொய்தற்கும் அது வித்தற்கும் உரியது.

கருவியா லகிலொ டாரங் கற்புரங் திமிசு னூறி
மருவியாங் குறவர் நீக்கி வளைத்தன காடு மாணப்
பரவியாங் கருவி வீழும் சாரற்பைந் தினையை வித்திக்
குருவியுங் கிளியு மோப்பிக் குறமகள் காக்கு நாளால். (௩)

விண்ணினார் வரையின் றாழ்வில் வேழமென் றினையை மாந்த
நண்ணினான் குறவ னண்ணி நனிவெகுண் டோடி யேறி
மண்ணினார் புற்றி னுச்சி நின்றவார் சிலையை வாங்கிக்
கண்ணினா லமர்ந்து நோக்கிக் களிற்றின்மத் தகத்தி னெய்தான். (௪)

விடுகணை நுதலி னுங்க வேழமும் வெகுண்டு மற்றோர்
தொடுகணை தொடாம லந்தப் புற்றின்மே லோடி யேறிப்
படுகணை யுருவப் பாயப் பாம்பழ லுமிழ்ந்து பொங்கிக்
கொடுவிலுங் கணையும் வீழக் குறவற்கொன் றிட்ட தன்றே. (௫)

நாகத்தைக் குறவ னல்ல பத்திர முருவிக் கொண்டு
பாகத்தைப் படுத்து வீழ்ந்தான் வீழ்தலிற் பசியின் வாடி
மோகத்தாற் சென்று கண்டோர் முழைநரி முழுதுந் தின்பான்
ஆகத்தா னமைக வென்ன வாய்ந்தது வகுக்கு மன்றே. (௬)

---

௩. கருவி - ஆயுதங்கள். ஆரம் - சந்தனமரம். "திமிசு - ஓர்மரம்', (சிந்தா - விம - ௧௩). மருவியாம் குறவர் - பயிலப்பழகிவருகின்ற மலைநாட்டார்; "மருவியாம் மாமலைநாடன்" என்னுந் திணைமாலைநூற்றைம்பதுத் தொடர்க்கு (௧௮) இப்பொருள் கூறப்பட்டது. னூறி நீக்கி வளைத்த காடுகள் மாட்சிபெற என இயைக்க. பாவி - பரந்து. ஆங்கு அசை.

௪. மாந்த - உண்ண. மண்ணின் - மண்ணால். வாங்கி - வளைத்து. அமர்ந்து நோக்குதல், குறிவைத்துப் பார்த்தல். மத்தகம் - யானைநெற்றி.

௫. நுங்குதல் - மூழ்குதல். வேடன் மற்றோரம்பை விடுதற்குமுன், யானை புற்றிற்கெதிரோடியேறி தன்மேற்பட்ட அம்பு அப்புற்றிலுருவும் படிபாய்தலால், அங்கிருந்த பாம்பு விஷாக்கினியைக் கக்கிக்கொண்டு சீறிக் குறவனைக் கொன்றிட்டதென்க. கொடுவில் - வளைந்தவில்.

௬. பத்திரம் - வாள்; "பத்திரம் வாங்கி" என்பது பெரியபுராணம். (மெய்ப்பொருணா - ௧௫.) படுத்தல் - துண்டித்தல். முழை - குகை. ஆகத்தான் அமைக - இச்சரீரங்களால் ஆகாரம் நிரம்புவதாக. வகுத்தல் - கூறுபடுத்துச் சொல்லல்.

களிறறு திங்கட் காகுங் கானவ னுகு மேழ்நா
ளொளிறுவா ளெயிற்று நாக முண்டொர்நாட் கிறையென் றெண்ணி
வெளிறிலாச் சிலையிற் கோத்த நாரிவாய்க் குதையைக் கவ்விக்
குளிறுபேழ் வாயி லுய்ப்பக் கொடுவிற்கோத் திட்ட தன்றே. (எ)

அத்தியு மரவின் வீழ்ந்த வேடனும் வேடன் கொன்ற
துத்திமா நாகந் தானுங் கிடப்பவிற் குதையைக் கவ்விச்
செத்தவிந் நரியைப் போலச் செய்பொரு ளீட்டு வார்கள்
சித்தம்வைத் தறங்கள் செய்யார் தேர்ச்சியின் மாக்க ளந்தோ. (அ)

சுற்றினார் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியி னரியைப் போலப்
பற்றினார் பெரிதும் வவ்விப் பகுத்துண தீட்டி னார்கள்
மற்றுண வெறுக்கை தன்னை மன்னரும் பிறரும் வவ்வத்
தெற்றென வெளிறு நீரார் செல்வமு மிழப்ப ரன்றே. (௯)

குடற்படு முடையைக் கண்டு குறுநரி தின்று மான்றேர்க்
கடற்படை யியக்கங் கண்டே கள்ளத்தாற் கிடப்ப யாருந்

---

எ. திங்கள் - மாசம். ஒளிறு வாள் எயிறு - விளங்குகின்ற வாள்போற் கூரிய பல். இரை ஆகும் என முன்னுங்கூட்டுக. வெளிறு - குற்றம்; "வெளிறில் வாள்" என்புழிப்போல (சிந்தா - முத் - ௨௭௬). நாரி வாய்க் குதை - நாணைத் தன்னிடங் கொண்ட விற்கடையிலுள்ள வரை. குளிறு தல் - ஓசையிடுதல்.

அ. அத்தி - யானை. துத்தி - புள்ளி.

௯. சுற்றின் ஆர் வில் - கட்டுப்பொருந்திய வில். சூழ்ச்சி - அறிவு பற்றினார் - பற்றினையுடையராய். உணவெறுக்கை-தான்ய தனங்கள். பிறர், திருடர் முதலானோர். தெற்றென - நிச்சயமாக. வெளிறு நீரார் - மதிகெட்ட தன்மையராய்; வெளிறுதல் - உள்ளீடின்றுதல்; 'வயிரமின் மரத்தை வெளிறென்பது வழக்கு.' பிறருடைமையைவெளவி ஈதலின்றி ஈட்டியவர் தம்முடைமையைப் பிறர் வெளவ இழப்பர் என்க. "அன்பொரீஇத்தற்செற் றறநோக்கா தீட்டிய - ஒண்பொருள் கொள்வார் பிறர்" என்னுந் திருக்குற ளோடு இதனை ஒப்பிடுக.

௰. குடல் படு முடை - குடரிலுள்ள மாமிசம். இயக்கம் - செலவு. திடன் - வலிமை. குடர்மாமிசமொன்றைக் கண்டு தின்றுகொண்டிருந்த நரி அருகே சைந்நியமொன்று செல்லுதலை நோக்கி 'இங்கே போர்நிகழு

திடற்பகை யின்மை யாலே செவிகொய்வான் வால்கொய் வானுய்
உடற்புறம்போர்த்தபுன்றேலுரித்திட்டங்கொருவன்கொன்றன். ()

நாட்டினு முளைக்கப் பட்ட முறைநரி யனைய நீரார்
ஈட்டிய பொருள்க டம்மை யீதலுந் துய்த்த லுனும்
மாட்டில ரகழ்ந்து பார்க்கீழ் நிலங்கொள வைப்பர் மாதோ
பாட்டரு மக்கள் யாக்கைப் பயன்கொளாக் கழிப்ப ரன்றே. (கக)

உண்டலோ டுறங்க லச்ச மிணைதலு மொருங்கு நாடின்
மண்டிணி யுலகின் வாழும் மாக்களும் விலங்கு மொப்பாம்
கண்டதொன் றுண்டு நல்ல வறங்களைப் பிடித்த நீரார்
பண்டித ரேனை மாக்கள் பசுவினுங் கடைய ரன்றே. (கஉ)

கடிமணக் கோல மாதர் காளைக்குக் காட்டி மீள்வர்
நடுவிடப் பட்ட தெல்லா நயப்புறக் கேட்டு நாய்கன்

---

மாதலால் மிக்க ஊனுணவுண்டாம்' என்று கருதிச் செத்ததுபோல் வழியிற் கிடக்க, அவ்வாறு போர்நிகழ்ச்சி யொன்றுமின்மையால், வழிப்போக்கனொருவன் செவியையும் வாலையுங் கொய்து அதன்றோலையுரித்துச் சென்றான் என்க. பொருள் வேட்கையாற் செய்யும் சூழ்ச்சி உயிர்க்கிறுதி பயக்கும் என்பதுபட நின்றமையால், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்; பிறவும் இவ்வாறே வருவனவற்றுக் குரைத்துக்கொள்க. தொடற்பயனின்மையாலே துளைச்செவி வால்கொய்வானுய்'' எனவும் பாடம்.

கக. பார்க்கீழ் அகழ்ந்து. பாட்டரு மக்கள் - புகழ்தற்கரிய மக்கட் பண்புடையோர்; மக்கட்பண்பாவது ஐயறிவோடு மனமென்னும் ஆறுமறிவு முடைமை; "மனஷ்ஷஷ்டாநீந்த்ரியாணி" என்பது கீதை. "மக்க டாமே யாறறி வுயிரே" என்பது தோல்காப்பியம்.

கஉ. உம்மையை எனையவற்றுக்கும் கூட்டுக. இணைதல்-மகளிர்முயக்கம். "இணைவிழை வொருங்கு" எனவும் பாடம். மாக்கள் என்றார், பசுப்போல மனவுணர்வின்றி ஐயுணர்வேயுடைமைபற்றி; "மாவு மாக்களு மையறி வுயிரே" என்பது தோல்காப்பியம். "ஆகார நித்ரா பயமைது னஞ்ச ஸாமரன்ய மேதத் பசுபிர் நாரணும்; தர்மோஹி தேஷா மதிகோ விசேஷ:, தர்மேண ஹீனு: பசுபிஸ் ஸமானு" என்னும் வடமொழிநீதிவசனத்தோடு இதனை ஒப்பிடுக.

கங. உஞ்சயினி நகரத்தில் ராஜசிரேஷ்டியாய் இப்பர் குடியினனான ஸ்ரீதத்தனுக்கும் அவன் மனைவி யசோபத்ரைக்கும் நெடுநாள் புத்திரின்றிப்

கெடியெனக் கூறி யாங்கே யுணர்தலிற் கேட்டு வந்த
வுடையது மொருங்கு கொண்டே விடையமுங் கடிவித் திட்டான்.()

இளமையும் வனப்பு நில்லா வின்பமு நின்ற வல்ல
வளமையும் வலிது நில்லா வாழ்வுநா ணின்ற வல்ல
களமக ணேச நில்லா கைப்பொருள் கள்வர் கொள்வார்
அளவிலா வறத்தின் மிக்க தியாதுமற் றில்லை யன்றே. (கச)

நின்றன வல்ல வாணு ணிதியமு நின்ற வல்ல
சென்றுசென் றணுகி நாளுஞ் சினவரன் சொன்ன நன்னூ
லொன்றிய மனத்த ராகி யூதியங் கொள்வர் நல்லோர்
அன்றெனி லதனைக் காணு வாதனே போலு மன்றே. (கரு)

கேத்திர நன்ற தாகிற் கேடின்றி யிட்ட வித்து
வாய்த்ததா வெழுந்து நன்றாய் விளைதலைக் காட்டு மாபோல்

---

பின் சுகுமாரன் என்னும் புத்திரன் பிறந்ததும், தந்தை துறந்து தீக்ஷா ப்ராப்தனாக, தாயான யசோபத்ரை புத்திரனுடன் ஒரு முனிவரை யடைந்து போய்நமஸ்கரிக்க, அம்முனிவர் 'இம்மகன் சீக்கிரம் துறந்து முனியாவான்' என்று கூறலும், தாய் வியசனித்தவளாய், புத்திரனுக்கு ஸம்சாரதுக்கமே தோன்றாவண்ணம் எல்லாபோகவஸ்துக்களையும் நிரப்பி, தேவஸ்திரீகளுக்கு சமானரான முப்பத்திருவரை மணப்பித்து இவ்வாறு செல்கின்ற காலத்தே, சுகுமாரனது பக்குவதசையையறிந்துதபோதனரொருவர் அவன் வசிக்கும் மாடத்தருகேயுள்ள ஜினாலயமொன்றிலிருந்து, அர்த்தராத்திரியில் அவன் காதுகேட்ப, தேவமானுஷ்யநரகலோகஸ்திதிகளைக் கூறிப் பின்பு பத்மகுல்ம மென்னும் விமான விசேஷமுரைத்தலும், அவன் பூர்வஜன்மத்தே அதில் இருந்தவனாதலால், ஜாதிஸ்மரணைவந்து சம்ஸாரவைராக்கியனாய் வாயில்காவலரும் அறியாதே போய் அம்முனிவரை அடைந்து நமஸ்கரித்து தீக்ஷாப்ராப்தனாயினன்" இக்கதை, ஜீவசம்போதனையிற் கண்டது. இச்கதையை உட்கொணடு இப்பாடலமைந்திருத்தல் உய்த்துணர்க.

கச. களமகள் - இல்லாள். கெடி - ஈண்டு வியப்புணர்த்தியது.

கரு. சினவரன் - அருகன். ஊதியம்-பயன். அதனை-அவ்வூதியத்தை. ஆதன் - மூடன்.

கசு. கேத்திரம் - க்ஷேத்திரம். "நன்னிலத் திட்ட வித்தி னயம்வர விளைந்து செல்வம் - பின்னலம் பெருக வீனும் பெறலருங் கொடையும்'

ஏத்தருந் தவத்தின் மிக்க வெல்லையில் குணத்தி னோர்க்குப்
பாத்திர தான மீந்தாற் பயனுமற் றதனை யன்றே. (கசு)

ஒக்கத்தான் மதிய முட்டு முறுதவ னகரி முன்னே
யாக்கையா லழகி தாயோர் பொன்மயி லாடக் கண்டு
தோக்கையைப் பற்ற லோடுந் தொட்டவன் காய தூக்கிக்
காக்கையாப் பறந்தே யோடக் கவர்ந்தங்கை சோர்ந்து விட்டான். ()

வேறு.

நல்ல சூழ்ச்சியி லாநரி யெய்திய
அல்லல் கேட்டு மறஞ்செய்கி லாதவர்

---

என இவ்வாசிரியரே கூறுதல் காண்க (சித்தா - முத்தி). பாத்ரதானம் நால் வகைத்தானங்களிலொன்று;—அஃதாவது, தபோதனர்க்கு நவபுண்யக் கிரமத்தால் நிரவத்யாகாரத்தினைத் தான், பவித்ரமாகிய சாஸ்திரத்தினைத்தான், விசுத்தமாகிய ஔஷதத்தினைத்தான் தானம் பண்ணுதல். (ஸ்ரீபுராணம்) பயனும் அதனை அற்று - பயனும் அக்கேத்திரவிளைவின் அளவாம்.

கஎ. ஒக்கம் - உயர்ச்சி. "மதியமுட்டும் உறுதவம்" என்பது தவத்தின் பெருமையைக் காட்டும் ஒரு ஜைனவழக்கு. உறுதவன் நகரி - ஜினசைத்தியாலயம். தோக்கை விரித்தல். தொட்டவன்-கைப்பற்றிய அர்ச்சகன். தார் மீகனான சிராவகனொருவன் ஜினசைத்யாலயமொன்றுகட்டி ஜினபிம்பப் பிரதிஷ்டையும் செய்து நித்யபூஜாங்கத்துக்கு யோக்கியமாகிய படித்தாம் செய்விக்காது இறந்து போய்த் தேவலோகத்திற் பிறந்ததாகவும், அங்கே அவன் அவதிஜ்ஞானத்தாலே பூர்வபவங்களையறிந்து கோயிலுக்குப் படித் தரம் செய்யாததை உணர்ந்து, தானே பொன்மயில் ரூபமாகத் தான் கட்டிய ஜினாலயத்தை யடைந்து, சுவாமிக்கும் அர்ச்சகனுக்கும் யோக்யமாக நித்யக்கட்டளைக்கு இரண்டுபொன்னிறகு போகட்டுவந்ததாகவும், அவற்றால் அந்த அர்ச்சகன் ஜீவித்துக்கொண்டு சுவாமி பூஜாகார்யங்களைச்செய்து வருகின்றவன் துராசையால் அந்த மயிலைப்பிடித்து விற்கலாமென்று அதனை நெருங்கித்தழுவப்போக, அஃது ஆகாசத்தில் அவனுடன் எழும்பிக் காக்கைவடிவாய்ப் பறந்து போக, அவ்வர்ச்சகன் பூமியில் விழுந்து மாண்டுவிட்டதாகவும் புண்யாசிரவகதையில் கதைகாணப்படுமென்பர். "கவுத்தன்கை சோர்ந்து விட்டான்" எனவும் ஒரு பிரதியிற் காண்டலால், இவன் பெயர் 'கவுத்தன்' போலும். தூக்குதல் - தள்ளல்.

கஅ. பின்வரும் எய்திய, செய்யிய என்னெச்சம். இட்டிகை-செங்கல் புல்லிதாக் கொண்ட - அற்பமென்று நினைத்துக் கைப்பற்றிய. இது

செல்ல லெய்திய செம்பொனி னிட்டிகை
புல்லி தாக்கொண்ட வாணிகன் போல்வரே. (கஅ)

மெய்ப்பொரு டேறலன் பற்றுள மேபுரிந்
திப்பை யாக்கையிற் றேர்ச்சியில் வாணிகன்
கப்பி யாப்பிறந் தானெனுங் கட்டுரை
ஒப்ப நூலுணர்ந் தார்சொலக் கேட்டுமால். (கக

---

லோலுபன் என்னும் பிட்டுவாணிகன் கதை கூறியவாறு; அஃதாவது:— "ஒரு நாள் தன் நகராதிபதியாகிய ஜயசேனமகாராஜன் ஒரு ஜினபவனங் கல்பிப்பான்வேண்டி இஷ்டகைகளைப் பரிஜனங்களால் அழைப்பிக்கின்ற பொழுது, பரிஜனங்களுள் ஒருவனுக்கு லோலுபன் ஆகாரங்கொடுத்துச் சில இஷ்டகைகளைப் பிரயோஜனத்தால் வாங்கிவைக்கின்ற பொழுது, ஒரு இஷ்டகையதனுள் சுவர்ணசகலம் (துண்டம்) காணப்பட்டது. அதுகண்டு சந்துஷ்டனாகி முன் தந்த பரிஜனத்துக்கு பகுவிதசம்மானதானங்களினால் அவ்வவ்இஷ்டகைகளை ப்ரச்சந்நமாக அழைப்பித்துவாங்கித் தன் கிருகத்தில் நிக்ஷேபிக்கின்ற இவன், ஒருநாள் கிராமாந்தரத்துத் தன் புத்திரியினைக் காண்பான்வேண்டிப் போகின்றவன் தன் புத்திரனை நோக்கி, புத்திரனே! ஆகாராதிதானத்தினால் இஷ்டகாஸங்கிரகணம் பண்ணுவாயாக' என்று சொல்லிப்போகி மீண்டுவந்து, புத்திரன் உபேக்ஷயால் இஷ்டகாசங்கிரகணம் பண்ணாதது கண்டு கோபித்துப் புத்திரன் மஸ்தகத்தினையும் போன தன் கால்களையும் அடித்தனன். எதத்விருத்தாந்தத்தினைக் கேட்ட நரபதியாஞ்ஞையால் பரிஜனங்கள் சித்ரதண்டம் பண்ண மரணமடைந்து இந்தக் கீரியாயினன்" எனக்காண்க. இச்சரிதம் ஸ்ரீபுராணம் விருஷப தீர்த்தகர புராணத்துக் கண்டது.

கக. பற்றுள்ளம் - இவறுமெண்ணம் இப் பை யாக்கை - இந்தக் கூடாகிய உடல். யாக்கையிற் றேர்ச்சியின்மை - அதனிழிவு நிலையாமைகளை அறியாமை. கப்பி - குரங்கு: கபிః என்னுமாரியச் சிதைவு நாகதந்தன் என்னும் வாணிகன்வரலாறு கூறியவாறு. அஃதாவது:— "தான்யபுரத்து குபேரதத்த சிரேஷ்டியனுக்கும் சுதத்தை என்னும் பாரியைக்கும் நாகதந்தன் (என்பான்) புத்திரன். இவன் அப்ரத்தியாக்யான மாயாகஷாய தீவ்ரோதயத்தால் தகர்மருப்போடொத்த மாயையினில் மனோவாக்காயங்களால் அடக்கமின்றி வர்த்தித்தலில் ப்ரபத்ததிர்யகாஷ்யுத்தனாகி வர்த்திக்கின்றகாலத்து, தன் தங்கை கல்யாண விதியின் பொருட்டுத் தன் பிதாவினது கடையிலே தன்மாதா ஸாரரத்னங்களைத் தெரிந்து வாங்குகின்ற

நரியி னுருரை கேட்டபி னல்லராய்ப்
புரிவி னல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளீஇ
அரிவ ரம்மக னப்பொருள் வேட்கையாற்
றெரிவித் திட்டறஞ் செய்பொருள் செப்பினன். (உ0)

அஞ்சு மின்னதி லோபமில் லோர்களுஞ்
செஞ்சு டர்நெடு வேற்றிரி யோ தனன்
பஞ்ச வர்க்குமண் பாகங் கொடாமலே
துஞ்சி னன்கிளை தன்னொடு மென்பவே. (உக)

குட்ட நீர்த்துறைப் போம்வழிக் கூனியை
ஒட்ட லன்புன லுய்த்தவக் காகுத்தன்
திட்டை வேண்டிய தேர்ச்சியில் வாணிகன்
பட்ட தெய்துவ பற்றுளத் தார்களே. (உஉ)

---

விடத்து வஞ்சிக்கவிடம்பெருமையால் சங்கிலேசத்தோடு மரித்து இக்குரங்
காயினன்" என்பது. கட்டுரை - வரலாறு. இச்சரிதமும் ஸ்ரீபுராணத்து
மேற்குறித்தவிடத்திற் கண்டது.

உ0. நரியினுற் உரை - நரிவிருத்தம். புரிவின் - விருப்பத்துடன். பொய்யாக்கொளீஇ-(யாக்கை செல்வங்களை) அநித்தியமாகக் கருதி. கொளீஇ நல்லறஞ்செய்வர். அரிவானுகிய மகன். அரிவரன் என்பானொருவன் தருமத்தைச் செய்யவேண்டுமென்ற ஆசையால் முனிகளிடத்தே தர்மங் கேட்டு அதை அநுஷ்டித்தான் எனவும் இது கதாகோசம் என்னும் நூலிற் காணப்பட்ட தெனவும் கூறுவர்.

உக. பொருள் வெளிப்படை. "அதிலோபமுள்ளோர்களும்" எனவும் பாடம்.

உஉ. காகுத்தன் என்னும் வாணிகன் ஒருஸ்திரீயின் ஆபரணவாஞ்சையால் நடுக்குளத்தில் அவளைத்தள்ளி அவளாபரணத்தை கைக்கொள்ளப் போக அவள் இவனை இறுகத்தழுவிக்கொள்ளுதலால் தன்னுயிரைக் காப்பாற்றுதற்கு மேட்டுநிலம் காணப்பெறாது அமிழ்ந்து உயிர்விட்டான் என்பது ஜைனவாலாறு. காகுத்தனுகிய வாணிகன் என இயைக்க. திட்டை-மேட்டு நிலம்.

நட்டவன் வந்து நல்லறங் காட்டவும்
ஒட்ட லன்னதி லோப முடைப்பெருஞ்
செட்டி யெய்திய தெய்துவ தேபொருட்
கிட்டி யம்மனத் தார்கிளர்ந் தென்பவே. (உ௩)

நாட்டி யாத்திரை செய்பவ னன்மணி
காட்டி வைத்தவன் போய்வந்து கண்ணுறச்

உ௩. நட்டவன் - சினேகித்தவன், நல்லறம் - நீதிமுறை; ஒட்டலன் - சம்மதியாதவனுன. இக்கதை, "தநதேவனால் நிக்ஷேபிக்கப்பட்ட தனம் என்கண் ணில்லையென்றுகொடாத சிவதேவனுக்கு ஜிஹ்வோத்காடனம் பண்ணுகின்றபடியும்" எனவரும் ஸ்ரீ புராணவரலாறு போலும். பொருள் கிளர்ந்து கிட்டிய மனத்தார் - பொருளிடத்து மிகுந்த பற்றுள்ள முடையார். கிளர்ந்து எய்துவது எனவியைப்பினும் அமையும். மனத்தார் எய்துவது செட்டி எய்தியதே எனமுடிக்க.

உச. காட்டிவைத்தவன் - குறிப்பிட்டு நிக்ஷேபித்துச்சென்றவன். சாட்டியம் - ஸாக்ஷ்யம்; "அழிசாட்டியம்" என்பது உலகவழக்கு. சத்திய கோடன் - சத்தியகோஷன். இவன் கதை ஸ்ரீ புராணத்து விமலதீர்த்தகர தீர்த்தப் பிரஸித்தராகிய மேருமந்தரகணதரர்களது சரிதத்துக்கண்டது; அது வருமாறு:—ஜம்பூத்வீப பரதக்ஷேத்திர ஸிம்ஹபுரத்து ராஜா ஸிம்ஹஸேனன்; தேவி ராமதத்தை; இவன் மந்திரி சுருதிஸ்மிருதிபுராணுதி ஸர்வசாஸ்திர பாரங்கதனுகி ஸத்யவாதாதி சயத்தால் ஸத்தியகோஷன் என்னும் நாமத்தையுடையனுகிய ஸ்ரீபூதி என்பான். பத்மஷண்டபுரத்து சுதத்தசிரேஷ்டிக்கும் சுமித்ராதேவிக்கும் புத்திரன் பத்ரமித்ரன்; இவன் ரத்நத்வீபமடைந்து உபார்ஜித பகுவிதரத்நத்தனுகி, ஸிம்ஹபுரத்திலே வசிப்பான்வேண்டி வந்து ஸ்ரீபூதி சமீபமடைந்து ஸ்வவ்ருத்தாந்த நிவேதனபுரஸ்ஸரம் ப்ரமாணபூதனென நினைந்து, இவன் கையில் தனது ரத்னங்களை நிக்ஷேபித்துப்போகி, பத்மஷண்டத்து நின்றும் ஸ்வபந்து ஜனங்களைப் பேர்ந்து, ஸிம்ஹபுரம் புகுந்து சத்யகோஷனையடைந்து தனது ரத்னங்களை வேண்டிய பின், ஸத்யகோஷனும் 'அஸத்யம் சொல்லுகின்றாய்; யான் உன்னைக்கண்டறிவதில்லை' என்று சொல்லி லோபகாயாதிரேகத்தால் அத்யந்தாபந்ஹவம் பண்ணினன். அதுகேட்ட பத்ரமித்ரனும் அதிக சோப சோகத்தினல் 'அஹோ! ஸ்ரீபூதி, ராஜமந்திரி ஸத்யகோஷனென்றும் விப்ரோத்தமனென்றும் மந்த்ரி முக்யனென்றும் தர்மசாஸ்திரியென்றும் பரதிரவ்ய சுத்தனென்றும் நினைந்து அப்ரகாசமாக என்னால் ஸ்வஹஸ்த நிக்ஷிப்தமாகிய ரத்னகரண்டகத்தினைச் சௌர்யத்தினல் ஸ்வீகரித்து...... தர்மசாஸ்திர ப்ரோக்தமாகிய நியாஸாபந்ஹவ தோஷத்தையறிந்தும் திரவ்ய

சாட்டி யஞ்சொன்ன சத்திய கோடனும்
ஈட்டி வைத்திழந் தான்பொரு ளென்பவே. (உச)

---

லோபாதிரேகத்தால் அத்யந்தாபந்ஹவம் பண்ணுகின்ற மந்திரியது அந்யாயமார்க்கத்தை ஸர்வஜனங்களும் அறிவீராமின்' என்று அநவரதம் ராஜத்வாரத்திலும் ஸபாஸ்தானங்களிலும் விருக்ஷாக்கிரங்களிலும் நின்று ஸர்வஜனங்களும் அறியக் கூப்பிடலுற்றனன். சத்யகோஷனும் ஸ்வதோஷப்ரச்சாதனார்த்தமாக, 'அகோ! பத்ரமித்ரன் சோரஜனங்களாலே அபஹிருதஸர்வஸ்வாத்தனத்தனுதலில் சோகத்தால் உன்மத்தனுகி அஸமஞ்ஜஸப்பிரலாபியாகி நின்றனன்' என்று சகலருமறிவித்து, ஆத்மசுத்யர்த்தமாக நரபதிசந்நிதானத்து தர்ம்மாதிகார ப்ரோக்தமாகிய சபதத்தினையும் செய்தனன். ராமதத்தாமகாதேவி பத்ரமித்ரனது அநவரத ஆக்ரோசத்தைக் கேட்டு, 'பூர்வாபர விரோதமின்றியே ஏகப்ரகாரத்தால் ஆக்ரோசிக்கின்ற இவன் உன்மத்தனல்லன்போலும்; ஸத்யகோஷாபந்ஹவத்தினை த்யூதவியாஜத்தாலேபரீக்ஷிப்பன்' என ஸிம்ஹஸேன மகாராஜாவுக்கு அறிவித்து, யஜ்ஞோபவீத நாமமுத்ரிகைகளையே பணிதபந்தமாகவிசைந்து ஸத்யகோஷனோடு த்யூதஞ்செய்து ஜயித்தபின், அவ்விரண்டினையும் வாங்கி ரகஸ்யமாக நிபுணமதியென்னும் தாசியையுட் கொடுத்து, இவையே அபிஜ்ஞானமாக, பத்ரமித்ரநிக்ஷிப்த ரத்னகரண்டகத்தினைத் தருகவென்ற ஸத்யகோஷன் ஆஜ்ஞாபித்தனனென்று தத் பாண்டாகாரிகனுக்குச் சொல்லி, அதனை வாங்கிக்கொண்டு வருவாயாக வென்று சொல்லிப்போகவிட்டழைப்பித்த பின், ராஜா, அநர்க்கியமாகிய ஸ்வரத்னங்களையும் அவற்றையுங்கலந்து ரத்னகரண்டத்தினை பத்ரமித்ரனை அழைத்துக் கொடுப்ப, அவனும் அவற்றுள் ஸ்வரத்னங்களையே தெரிந்துகொண்டு சேஷரத்னங்களைக் கொடுத்தனன். ராஜாவும் அதுகண்டு சந்துஷ்டனுகி அதிகப் பிரஸாதஞ்செய்து, பத்ரமித்ரனுக்கு ஸத்யகோஷநாமஸஹித சிரேஷ்டி முக்யபதங்கொடுத்து, ம்ருஷாவாதியும் மாயாவியுமாகிய ஸ்ரீ பூதியினுக்கு தர்ம்மாதிகார நிர்த்திஷ்டமாகிய தண்டங்களைச் செய்கவென்று நியோகித்து தர்ம்மிளன் என்னும் ப்ராஹ்மணன்மிசை மந்த்ரிபதம் வைத்தனன். ஸ்ரீ பூதியும் ஸர்வஸ்வஹரணமும் யந்த்ரமுஷ்டி என்னும் மகாமல்லரால் இடப்பட்ட சவட்டைமுப்பதும் கம்ஸபாத்ரத்திரயம் நிறைந்த கோமயபக்ஷணமுமாகிய கண்டத்திரயங்களை அனுபவித்து நரபதிமிசை பத்தவைரத்தனுகிய......ஆர்த்தத்தியானத்தோடு மரித்து ராஜாண்டாகாரத்து அகந்தியனன் என்னும் சர்ப்பமாகிப் பிறந்தனன்." இவ்வரலாறு தமிழ் மேருமந்தர புராணம் பத்ரமித்ரன் சருக்கத்தும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

விழுமின் பொற்கலம் பெற்றங்கொ ரேழைபோய்க்
கழுவு வான்புகக் கைத்தலத் தின்னிரா
தழுவு நீர்புகுந் தாழ்தலிற் கெட்டுயிர்
வழுவி னார்கதை வைகலுங் கேட்டுமால். (உரு)

சந்த மாயினுந் தன்பழப் பிண்டியைக்
கந்த மாய்ப்புளி நீரொடு காடியாய்ச்
சிந்தை யொன்றில னுண்ட சிரேட்டியும்
அந்த மில்பொருள் காத்தவ னாயினன். (உசு.)

---

உரு. விழு மின் பொற்கலம் - விரும்பத்தகும் ஒளியுடைய பொற் பாத்திரம். அழுவம் - பரப்பு. உயிர்வழுவினார் - உயிர் விட்டவர். இக் கதை ஜீவசம்போதனை என்னும் ஜைனமதகிரந்தத்தே அடியில் வருமாறு காணப்படுகிறது:—"பொன்னின் பரிகலத்தைப் போய்விற்பக் கண்டொருவன் - தன்னை விலையாடித் தான்விடலும்—பின்னை, விலைகொண் டவன் கழுவ வீழ்துரவி னுள்ளே-தலைகொண்டு போய்வீழ்ந்தான் றாழ்ந்து"—என்பது, கிருஷியாளன் மண்பணிசெய்யாநிற்ப, புராதனத்துக்கிடந்த பாசியேறிய பொன்னின் தளிகையைக் கண்டெடுத்து அதனை ஸ்வர்ணமாவதறியாதே ஒரு செட்டிக்குக்காட்ட, அவனும் பொன்னாவதறிந்து 'இதற்கு விலையென்' என்று கேட்ப, அவனும் அதற்கு நாழிமிளகுவேணுமென்று சொல்ல, செட்டி ஒருகாலே விலையறுத்தலாகாது என்று கருதி ஆழாக்குக் கொள்ளீர் உரிகொள்ளீர் என்று விட்டுப்பற்றுவதென்றுகருதி அங்ஙனமேசெய்ய, அவனும் போய் மற்றொரு செட்டிவந்தானுக்குக் காட்ட, அவனும் பொற்கலமாவதறிந்து நாழிமிளகுங்கொடுத்துக் கொண்டு, சீக்கிரம்போய் அதனைப் பாசியறக் கழுவுவனென்று ஒருபழந் துரவின் கரையிலிருந்து உரிஞ்சிக்கழுவ நிற்பக் கைநழுவிப்பாதாளத்திலே விழக்கண்டு ப்ரமைகொண்டு 'அதுகழுவாக்காலோ' என்று பிதற்றி மரணமெய்தினான்; முன்னம் விலையாடி விட்ட செட்டியும் அவனை யெங்கும் தேடிக்காணாமையால் 'அம்மிளகுகொடுத்தாலோ, அம்மிளகு கொடுத்தாலோ' என்று பிதற்றி மரணமெய்தினான்'' என்பது. இப்பாட்டில், நீர் புகுந்த ஆழ்தலினாலும், கெடவிட்டமையாலும் உயிர்வழுவினார் (இருவர்) கதை எனப்பொருள்கொள்க. கெட்டு - முன்னரே வாங்காது தவறவிட்டு.

உசு. சந்தம்மாயினும் - இயற்கை நலங்கெட்டிருப்பினும். தன் பழப் பிண்டியை தன்னிடமுள்ள பழைய இலவமுண்மாவை; பிண்டி - மா. கந்தமாக வாசமுடையதாக. சிந்தை ஒன்றிலன்-சிந்தையிலே இழிவுகருதானாய்.

பொன்னி னேறுடைச் செட்டியிற் போந்திருட்
கன்ன மிட்டவ னப்பொருள் கொண்டுபோய்த்
துன்னு தாபதன் றூங்குறி யிற்கிடந்
தின்ன லெய்தின னென்பதுங் கேட்டுமால். (உஎ)

நீடு நீணெறி செல்பவ னுடொறும்
பாடி கண்டங்கோர் பாசனத் தானிரை

---

" ஒரு லோபியாகிய செட்டி இலவமுள்ளை மாவாகஇடித்துப்புளித்தகாடியிற் கூழாகக்காய்ச்சிக்குடித்து மிகுந்ததிரவியம் சம்பாதித்தானென்பதும், அந்தத்திரவியத்தினுடைய ஆர்த்தத்யானத்தால் மரித்துப் பாம்பாய்ப்பிறந்து அதனைக்காத்துக்கொண்டிருந்தா"னென்பதும் கதை. இது ஜீவசம்போதனையிற்கண்டது.

உஎ. பொன்னின் ஏறு - செல்வத்தின்மிகுதி. கன்னமிட்டவனுய்த் துன்னியதாபதன் எனவும் தாபதன் இன்னலெய்தினன் எனவுமியையும். இவன் உறித்தாபதன் எனப்படுவான்; இவன்கதை சிராவகாசாரம் என்னும் நூலில் விசேடமாகக் காணப்படுமென்பர். இவன் ஆலமரமொன்றில் உறியைக்கட்டி அதிற் பகல்முழுதும் தங்கியிருந்து இராவந்ததும் களவு செய்பவனென்பதும், இச்செய்தி அரசனுக்குத் தெரிந்து அத்தாபஸனை சிக்ஷிக்க அதனால் மரணமடைந்து நரகமடைந்தானென்பதும் கதை. " தனசிரி சத்தியன் தாபதன் காப்பான், இனை தாடி வெண்ணெய் உரை " என்னும் அருங்கலச்செப்பில் தாபதன் என்பவன் உறித்தாபதன் என உரைகூறப்படுதலோடு அவன் " அந்நியருடைமையைக் கன்னமிட்டுத்திருடும் " தன்மைக்குக் கூறப்பட்டுமுள்ளான்.

உஅ. பாடி - ஆயர் ஊர். பாசனம் - பாத்திரம். தாடிவெண்ணெய்க்காரன் என்பவன், நாள்தோறும் பசுக்கூட்டத்தையுடைய ஆயர்பாடியிற்சென்று அவராற் பெற்றுக்குடித்துவந்த போரில் உண்டானவெண்ணெயைத் தாடியால் தோய்த்தெடுத்து ஒருசேர நெய் திரட்டியதாகவும் அதை வைத்துப் பெருத்த வியாபாரம் செய்யலாமென்னும் எண்ணத்தால் வெகு வாரம்ப பரிக்ரகத்தை மனதிலே நினைத்துக் கொண்டேயிறந்து நரகத்தை யடைந்தான் என்பதுங் கதை. மேற்பாடலுரையிற் காட்டிய அருங்கலச்செப்பில், தாடிவெண்ணெய்க்காரனென்பவன் "க்ஷேத்திர முதலான பொருளை வரைதலுக்கு" உதகரிக்கப்பட்டுள்ளான். அருங்கலச்செப்பிற்கு முதனூலும் ஸமந்தபத்ராசாரியரால் இயற்றப்பட்டதுமான ரத்னகரண்டகம் என்னும் வடநூலில், "தனஸ்ரீ ஸத்யகோஷௌச தாபஸா ரக்ஷகாவபி; உபாக்யேயாஸ்

நாடி நாடொறு நெய்தனக் கீட்டிப
தாடி வெண்ணெய் தனதுரை கேட்டுமால். (உஅ)

அறத்தி னற்பொருள் கேட்டது கொள்ளலன்
மறத்தி னுலா விந்தனு மாநிதித்
திறத்தி லொன்றில னூனுடைய யுண்டியுண்
டிறப்ப வுந்நர கத்திடை யெய்தினன். (உகூ)

---

ததாச்மசுரு நவநீதோ யதாக்ரமம்" என்னும் சுலோகத்தில் இத் தாடி வெண்ணெய்க்காரன் "சுமசுருநவநீதன்" என்று கூறப்படுவன். (சுமசுரு - மயிர்.)

உகூ. பொருள் - உபதேசப் பொருள். மறம் - பாபகர்மங்கள். மாநிதித்திறத்தில் ஒன்றிலன் - வித்யாதரசம்பத்தை அநுபவித்தலிற் பொருந்தாதவனாய் ஊன் உடை உண்டி - மாமிசத்தோடுகூடிய ஆகாரம். இவ்வரவிந்தன் சரித்திரம் ஸ்ரீபுராணத்து வருவ தடியில் வருமாறு:—"இந்த நகரத்து (அளகாபுரி) ராஜா அரவிந்தன் என்பான்: அவன் சிரகாலம் வித்தியாதரவிபவங்களை அநுபவித்து பஹ்வாரம்பபரிக்ரஹ ரௌத்ரத்யானபாபபரிணமத்தினால் சஞ்சிதமாகிய பாபகர்மங்களையும் நரகாயுஷ்ய பந்தத்தினையுமுடையனாகி, பிரத்யாஸந்நமரணசமயத்து தாகச்சுரவியாதிபீடிதனாகிய பொழுது பாபாதிரேகத்தால் அப்பியஸித்த வித்தைகளும் தனக்கு வசமாகாத பொழுது, ஜேஷ்டபுத்திரனாகிய அரிச்சந்திரனை அழைத்துச்சொல்லுவான்:— 'புத்திரனே! தாகச்சுரமகாஸந்தாபபீடிதமாகிய எனது ஸர்வாங்கங்களிலும் சீதோபசாரக்கிரியைகளால் விடப்பட்ட கல்லார அரிசந்தனாதிகளும் கரிந்து சந்தாபத்தினைச் செய்கின்றன கண்டாய்: இனி இதற்குப் பிரதிக்கிரியை யாவது—உத்தரகுருக்ஷேத்திரத்து சீதாநதி தீரோத்யானப் பிரதேசங்களில் என்னை உனது வித்தைகளால் உய்த்திடவே சீதாநதி சீதஜலபிந்துஸம்பர்க்க சீதளமாகிக் கல்பதருவனங்களிடை அசைகின்ற மந்த மாருதம் வந்துவீசிட எனது ஸர்வசந்தாபமும் உபசமித்திடும் போலும், என்றனன், என, அவனும் அவ்வாறு செய்கவென்று தனது ஆகாசகாமினி வித்தைகளையேவ அவையும் இவனது புண்யபரிக்ஷயத்தால் அவ்வாறு செய்யாது வைமுக்யமடைந்த பின், அரிச்சந்திரனும் தாகச்சுரமகாவியாதி அசாத்தியமேபோலுமென நினைந்து சோகபீடிதனாகிச் செய்வதறியாதிருப்ப, ஒருநாள், பவநப்பிரதேசத்து பாஸ்பரகலகத்தினால் க்ஷதமாகிய கிருககோகிலங்களினின்றும் வீழ்கின்ற ரக்தபிந்துக்கள் அரவிந்தன் சரீரத்தின்மேல் வீழ்தலுமே, தத்பிரதேசம் பாபதோஷத்தால் தாகம் உபசமித்திட்டது. இதெ

மான வேன்மன்னன் மாதவத் தார்க்குண்டி
தான மீயுழிச் சத்திய பாமையும்
ஊன மின்மனத் தாலுடன் பட்டனள்
ஈன மில்குரு வத்திடை யெய்தினள். (௩௦)

கயக்கில் கற்புடைப் பார்ப்பனி போசனம்
வியக்கப் பட்டவன் வேதியற் கில்வழி
மயக்கின் மாதவத் தாற்குண்டி யீந்தவள்
இயக்கி யாயின ளென்பதுங் கேட்டுமால். (௩௧)

---

தலுமே, பரமௌஷதம் இதுவேபோலும் எனக்கருதி அதுபொழுதே பெறப்பட்ட விபங்கஞானத்தாலே மிருககுலமொருவழி மிகவும் நின்றமை யறிந்து குருவிந்தனென்னும் கனிஷ்ட புத்திரனை நோக்கி இந்த மிருககுலங்களால் எனக்கு ருதிரவாவி சம்பாதித்துத் தருகவென அவனும் பாபபீருவாகி அது பொழுதே என் செய்யத்தகுவதென நினைத்துபோகி திவ்யஞானியாயினனொரு முனிவரால் பிரத்தியாஸன்ன பிதுர் மரணத்தினையும் நாககதிப்பிராப்தியினையும் அறிந்து தத்காரியத்தில் உதாசீனனாகிலும் பிதிர்வாசனம் அநுல்லங்கியமாதலில், கிருத்திரும ரூபத்தால் நிறைந்ததொரு ருதிரவாவி சமைத்துக்காட்டினனாக, அவனும் அதனை மகாதனங் கண்ட தரித்திரன்போலக் கண்டு களிசிறந்து புகவீழ்ந்துமண்டி எங்கும் பரிப்ரமியா நின்று அதனை முகந்து பருகிக்கொப்புளிக்குமளவில் அது குருத்ரும ருதிரமாவதறிந்து குபிதனாகித் தனது மணிச்சுரிகையினை உருவிக்கொண்டு இம்ஸானந்த பரிணமத்தாலே குருவிந்த குமாரனை வதிப்பானோடா நின்ற விடத்துத் தளர்ந்த வடியினனாகிவீழ்கின்றவிடத்துச் சுரிகை வாய்வீழ்ந்து பிங்கமூர்த்தியாகிப்போய் நாககதியினைப் பிராபித்தனன்" என்பது.

௩௦. மான வேல் மன்னன் - ஸ்ரீஷேணமகாராஜன். மானம் - பெருமை. சத்யபாமை - அம்மகாராஜனால் கபிலன் என்னுந் தாவீபுத்திரனுக்கு விசாரணையின்றியே விவாகம் செய்விக்கப்பட்டவள். மாதவத்தார் - ஆதித்யமதிகள் அரிஞ்சயர் என்போர். உண்டிதானம் - மூவகைத்தானங்களில் ஒன்று. அஃதாவது - மஹாதபஸ்விக்கு விசுத்த ஆகாரத்தினைக்கொடுத்தல் (ஸ்ரீ புராணம்) என்பர். இச் சத்யபாமைகதை ஸ்ரீபுராணத்து சாந்திதீர்த்தகார் மான்மியத்துக் கண்டது. குருவம் - உத்தரகுரு என்னும் போக பூமி.

௩௧. கயக்கு இல் கற்பு - வெறுத்தலில்லாத பாதிவ்ருத்யம். பார்ப்பனியாகிய வியக்கப்பட்டவள். வேதியற்கு - தன் கணவனாகிய பிராமணனு

சந்தனை யென்னு மாதர் சாரணர்க் கண்டு முன்றில்
வந்தனை செய்து பேணி வரகுநீர்ப் புற்கை யீந்தா
ளிந்திர ருவந்து நோக்கி யெல்லையில் செம்பொன் மாரி
அந்தரத் தமர ரார்ப்பச் சொரிந்துவந் தருச்சித் தாரே. (கூஉ)

---

க்கு. பார்ப்பனி வேதியற்குப் போஜனமில்லாதவிடத்தும், மாதவத்தாற்கு உண்டியீந்து இயக்கியாயினுள் என்க. பிராமணன் ஒருவனுடைய பத்தினியானவள், தன் புருஷனுக்காகாரமில்லா திருக்கவும், எதிர்கண்ட தபோதனரொருவரையுபசரித்து அவர்க்கு ஆகாரதானம் பண்ணினுளாக, அதுகண்ட புருஷனுனபிராமணன் அவளை இம்சிக்க, அது பொறுக்காது, அவள் கிணற்றில்விழுந்து இறந்து, தானபுண்ணியத்தால் தர்மதேவிஎன்ற யக்ஷியாகிப் பிறந்தாள் என்பதுகதை. இது, தர்மதேவதை கதையிற் கண்டதென்பர்.

கூஉ. சந்தனை - சந்தனை என்னுங் கன்னி. சாரணர் - ஸ்ரீவர்த்தமான ஸ்வாமி. வரகுநீர்ப் புற்கை - வரகாகாரத்தின் பரிணமமாகிய சால்யந்நம. பின்னிரண்டியும் சந்தனை பஞ்சாச்சரியத்தினைப் பெற்றமை கூறப்பட்டது. பஞ்சாச்சரியமாவன:—தேவர்களாற் பொழியப்பட்ட கனகவர்ஷமும் தேவதுந்துபியும் ஸுகந்தமந்தமாருதமும் தேவஸ்துதியும் புஷ்பவர்ஷமும் என இவை. ஈண்டு, 'செம்பொன்மாரி' எ - து கனகவர்ஷத்தை; 'அமரர் ஆர்ப்ப' எ - து தேவதுந்துபியையும் தேவஸ்துதியையும்; 'அருச்சித்தார்' எ - து புஷ்பவர்ஷத்தை; 'வந்து' என்பது மந்தமாருதத்தை; வந்தால் அருச்சித்தார் என்க. இனி இச்சந்தனைசரிதம் ஸ்ரீபுராணம் ஸ்ரீவர்த்தமான தீர்த்தகர புராணத்து அடியில் வருமாறு காணப்படுகிறது.—சேடக மகாராஜன் புத்திரியாகிய சந்தனை என்னும் கன்னிகையினைப் பூர்வகிருத பாப பரிபாகத்தால் பந்துக்களிற் பிரிப்பித்து ஒரு வித்யாதரன் எடுத்துக்கொண்டு போகி ஸ்வபார்யைக்கு பீதனுகி ஓர் அடவியிலே போகட்டுப்போக, ஒரு வியாதன் அவளைக்கொணர்ந்து விருஷசேனனென்னும் வைசியனுக்கு திரவியலாபார்த்தமாகக் கொடுப்ப, புத்ரியாகி வர்த்தியாநிற்ப—இவன்பாரியை ஸுப்பிரபை என்பாள் ஸ்வபர்த்தாவினுக்கு சந்தனையுடன் ஸம்பர்க்க தோஷத்தினை சங்கித்து வரகாகாரத்தினை சராவபாத்ரத்திலே போஜனம் பண்ணுவித்து, சரணங்களில் சிருங்கலாபந்தனமும் சீவரகண்டம் உடையாகவும் பண்ணுவித்துச்செல்லாநிற்பப், பகவான் (வர்த்தமானசுவாமி) மற்றொரு நாள் வத்ஸவிஷயகௌசம்பிநகரத்து சர்யாமார்க்கார்த்தம் எழுந்தருளுதலும், அதுகண்டு சந்தனை அதிகமெதிர்கொள்வனென நினைந்தபொழுது சிருங்கலாபந்தனமும் தானே கழன்றது; பூர்வவத்ஸுகந்த புஷ்பமால்யா

பற்றுள மென்றோர் பாவை பாவமும் பழியு மாக்கிச்
சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை தூக்கிச்
சொற்றுள வாயதுன்பம் பயத்தலிற் றுறந்து போகிக்
கற்றறி வுடைய மாந்தர் கடிந்தன ரதனை யன்றே. (௩௩)

ஓங்கிய தவத்தின் மிக்க வுறுதவர்க் குறுதி நாடின்
ஈங்கிரண் டல்ல தில்லை யிசைகொடா நிற்ப மண்மேற்
பாங்கமை செல்வ ராகிப் பகுத்துண்டு வாழ்த லொன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்ற லொன்றே. (௩௪)

இல்லறத் தியல்பு குன்று வேந்துபூண் முலையி னார்தோள்
புல்லறப் புல்லி மண்மேற் பூவணை பொருந்தலொன்றே
நல்லறத் திறைவன் சொன்ன நாற்கதி நவையை நீக்கும்
தொல்லறத் துணிவி லாதார் துன்பத்தைத் துணிந்து நின்றார்.

---

லங்கிருதமாகிய கேசபாரமும் அழகுபெற்றது; சீவரகண்டமும் மஹாநர்க்கியமாகிய பட்டுவெஸ்திரமாயிற்று; ஸர்வாங்கமும் ஸர்வாபரண பூஷிதமாயிற்று; வராகாரமாகிய புற்கையும் திவ்விய சால்யந்நமாயிற்று; சராவபாத்ரமும் ஸ்வர்ணபாஜனமாயிற்று: சந்தனை அதிகாநந்தத்தினோடுங்கூட நவபுண்யக்கிரமத்தால் எதிர்கொண்டு வராகாரபரிணாமமாகிய பவித்ர சால்யந்நத்தினை அமிர்துசெய்விப்ப பஞ்சாச்சரியத்தினையடைந்து ஸ்வபந்துக்களுடனே சேர்ந்தனள்” என்பது.

௩௩. பற்றுளமாகிய ஒருபெண். சிற்றுளமிலேச்சர் - அற்ப எண்ணமுடைய சண்டாளர். மிலேச்சர்க்குரிய நாற்கதி என்க. நாற்கதி, தேவ மானுஷ்ய திரியக்நரககதிகள். தூக்குதல் - அலைவித்தல்; “குரங்குகள் மலையைதூக்க” என்பது திருமாலை.

௩௪. உறுதவர்க்கு - தபோதனர்களிடம்: வேற்றுமையக்கம். உறுதி - புருஷார்த்தம். ஈங்கு இரண்டு - இல்லறந்துறவறங்கள். கொடாநிற்ப - கொடுத்து நிற்பன. மண்மேல் பகுத்துண்டு வாழ்தலும் தவநிலைநிற்றலுமாகிய இரண்டல்லது இசைகொடாநிற்பன (பிற) இல்லை என இயையும், தாங்கியதவத்தின் - ஜன்மாந்தர புண்யத்தால். சிராவக யதிதர்மங்களிரண்டும் நற்கதியளித்தற்குரியன என்பது கருத்து.

௩௫. புல் அறப் புல்லுதல் - சிராவகதர்மத்துக் கிழுக்கின்றித் திளைத்தல். புன்மை - இழுக்கு. இறைவன் - அருகன். தர்மப்படி ஒழுகின் சிராவக நிலையையே பாவத்தை நீக்கவல்லது என்பது கருத்து.

ஈகைநற் றான மீந்தா ரிணையிலாக் குருவின் மிக்க
போகத்தைக் கொடுத்துப்புத்தே ளுலகருங்கொடுத்து மண்மே
லேகால் லின்ப மாக்கி யிறைவனற் காட்சி யீயும்
மேகத்து மின்னே டொக்கும் விழுச்செல்வ மதிக்க வேண்டா.

பற்றுள மகல நீக்கிப் பாசிழைப் பரவை யல்குற்
பொற்றொடி மகளிர் தங்கள் புணர்முலைக் குவட்டின் வைகிச்
சுற்றத்தார் சுற்ற வாழ்த லன்றெனிற் றுறந்து போகி
நற்றவம் புரிவில் லாதார் நடலைநோய்க் கடலு ளாழ்ந்தார்.

கலையெலா நிறைத்த லொன்றே கதிர்நகைப் பவளச் செவ்வா
யலைகட லமிர்த னாரோ டகிற்புகை யளாய சேக்கை
முலையுற முயங்க லொன்றே முனிவனம் புகுத லொன்றே
புலைகொலை களவோ டொன்றிப் பொழுதவங் கழிப்ப ரன்றே.

இருந்தவர்க் கிசைவ தொன்றே கரப்பில தாக வீந்து
கருந்தடங் கண்ணி னார்தோட் கதிர்முலைக் கரத்த லொன்றே
பொருந்திய சுற்ற மென்னு நிகளத்தைப் பரிந்து போகி
அருந்தவ முயற்சி யில்லா ராசையு ளழுந்து கின்றார். (நகூ)

உத்தம தான மீந்தே யொண்பொரு ளுவந்து நல்ல
உத்தமர்க் குவந்து முன்னே யுத்தம தான மீந்தே

---

நசு. ஈகை - வறியராய் எற்றார்க்கு மாற்றாதுதவல். நற்றானம்:— சாஸ்திரதானம் அபயதானம் ஆகாரதானமென மூவகையாகவும், தயாதானம் பாத்திரதானம் சம்மானதானம் அந்வயதானமென நால்வகையாகவும் கூறுவர்; இவற்றின் விரிவு ஸ்ரீபுராணத்துக்கண்டது. நற்காட்சி-அநந்த தரிசனம். நடலை - துன்பம்.

நஅ. பிரமசரிய நிலையினராய்ச் சாஸ்திரங்களைக்கற்றலும், இல்லாளோடுகூடி சிராவகதர்மங் கொண்டொழுகலும், யதிதர்மத்தராகலும் ஆகிய இவற்றில் ஒன்றுஞ் செய்யார் என்க. ஒன்றே என்பவை மூன்றும் ஈண்டு எதிர்மறுத்து நின்றன; பின்வருவனவுமன்ன. முனிவனம் - தபோவனம். புலை - புலாலுண்டல். அவம் - வீண்.

நகூ. இருந்தவர் - மிக்க தவமுடையார். இசைதல் - உபசரித்தல். கரப்பிலதாக - ஒளித்தலின்றி. நிகளம் - பாசம். பரிதல் - அறுத்தல்.

௩௰. (முதல்) உத்தமதானம் - உயர்ந்த ஆசனம். "ஒண்பொருள்"

உத்தம நெறிநின் றார்க்கு முவமைபொன் றில்லை யாகும்
உத்தம குருவும் புத்தே ளுலகமு முடைய ரன்றே (௪0)

மறுவிலாக் குணத்தின் மிக்க மறுவறு தவத்தி னோர்க்கு
மறுவறு தான மீந்தே மறுவிலாப் போக பூமி
மறுவிலாப் பயன்கொ டுத்து மறுவில ராவர் மாதோ
மறுவிலா மண்ணும் விண்ணு மறுவின்றி விளங்க வன்றே.

நடரிடைப் பட்ட நாளும் நாற்கதி நவையை நீக்கி
யிடரிடை யுய்த்த லின்றி நீண்மணத் தொகுப்பி னோர்க்குஞ்
சுடர்கொள்பூம் பிண்டி நாதன் றொல்லறந் துணிந்து முன்னே
படர்கள்பூஞ் சிந்தை வைத்தார் பவக்கட லெல்லை காண்பார்.

உள்ளறப் பற்று நீக்கி யுத்தம தான மீந்தே
கள்ளவிழ் கோதை மாதர் கதிர்முலைக் கரத்த லொன்றோ
புள்ளுறைந் தினிது நீண்ட தவவனம் புரிந்து போகி
எள்ளற நோற்றல் செய்யா ரிடும்பைநோய்க் கிரைக ளாவார்.

வேறு.

கோற லோம்புமின் கொன்றபி னூன்றடி
மேற லோம்புமின் மெய்ப்பொரு ளல்லன

---

என்றார், "பழியினீங்கி நன்கீட்டிய பசும்பொருள்" என்பதற்கு. அறத்தி னாற்றிய அரும்பெரும் பொருளைப் - புறத்துறை குற்றமூன்றறுத்த நற்ற வர்க்கு, உள்ளமுவந் தீதல் உத்தம தானம்" என்பது திவாகரம். முன்னே - முதற்கண்.

௪௧. கொடுத்து - கொடுப்ப.

௪௨. நடரிடைப்பட்ட நாற்கதிநவையை நாளும்நீக்கி என இயைக்க. உய்த்தல் - செலுத்தல். நீண்மணத்தொகுப்பு - எங்குங்கமழுகின்ற வாச னைச் சேர்க்கை. ஆர்க்கும் - நிறைக்கும். ஆர்க்கும் பூ எனவும் சுடர்கொள் நாதன் எனவுமியையும். சுடர்சொள் - பிரபாவலய மூன்றினையுமுடைய. படர்கள் - தொண்டர்களாய். தொல்லறத்தைச் சிந்தைவைத்தார் என்க.

௪௩. உறைந்து - உறையப்பெற்று. புரிந்து - விரும்பி. எள் அற - இகழ்ச்சி நீங்க.

௪௪. ஓம்புதல் - பரிகரித்தல். ஊன்தடி - மாமிசத்தசை. மேறல் -

தேற லோம்புமின் றீபவை யானவயுங்
கூற லோம்புமின் நற்குண மல்லன. (௪௪)

விட்டு நீக்குமின் பற்றுள மின்மையாற்
கட்டு மெண்வினை காற்றளை கட்டலால்
ஒட்டி யின்னுயிர் கோறல் பிறர்மனை
விட்டு நீங்குமின் சுற்றறிந் தீரெலாம். (௪௫)

ஊக்கி யொண்பொரு ளெட்டுணைத் தாயினு
மாக்கி நல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளின்
நீக்கி நல்லற நிற்ப நிலாவிடிற்
றேக்கு மேற்றுணைச் செல்கதி யில்லையே. (௪௬)

திருத்த மொன்றலிர் தேர்ச்சி யிலாநரி
விருத்தங் கேட்டனு மெய்யென வோர்ந்துள
வருத்த முற்றவர்க் கிந்தருள் செய்திரேல்
வருத்த மொன்றில செல்கதி மாடெலாம். (௪௭)

வரைத்த நாளன்றி வாழ்பவ ரின்மையால்
உரைத்த மாட்சி யிலாநரி யுற்றகோட்

மெல்லுதல்: தின்றல். 'மெய்ப்பொருளல்லெனில்' எனவும் பாடம். கூறல் கூறற்க: அல்லீற்று வியங்கோள். நற்குணமல்லன ஓம்புமின்.

௪௫. இன்னுயிர் கோறல் காற்றளையாகக் கட்டலால் (அதிற்) பற்றுள மின்மையோடு விட்டு நீங்குமின்; பிறர்மனை (விழைதலை) விட்டு நீங்குமின் —என இயைக்க. கட்டும் எண்வினை - வருப்பமைந்த எண்வினை; "கட்டமை நீதி" என்புழிப்போல (சிந்தா-குண. உ௬௬). எண்வினையாவன;—ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பன.

௪௬. சிராவக தர்மத்தினின்று சிறிதேனும் பொருளைத் தேடி நல்ல தர்மஞ் செய்வர்; அன்றி யாக்கை செல்வங்களின் நிலையாமைகருதின் பற்றற்று யதிதர்மத்தில் நிற்பர்; இவ்விரண்டனுளொன்றில் நில்லாவிடின் நற்கதியில்லை யென்க. தேக்குதல் - இன்பம் நிறைதல்.

௪௭. திருத்தம்-ஒழுக்கம். வருத்தம் ஒன்றில-துன்பங்கள் பொருந்தா.

௪௮. வரைத்த நாள் - விதிக்கப்பட்ட ஆயுள். கோள்திறத்தின்—குற்றப்பகுதியினின்று. ஒன்றிலன் - நல்வழியிற் பொருந்தாதவனாய். பின்னடி

டிறத்தி னென்றில னூனுடை யுண்டியுண்
டிறப்ப வுந்நர கத்திடை யெய்தினன். (சஅ)

மற்றி மண்மிசைப் பற்றுளத் தாற்கிளை
யுற்ற மாந்த ருரைபல வுண்மைபாற்
குற்ற மாய்க்கொண்டு லோபெனும் பாவியைக்
கற்ற மாந்தர் கடிந்தன ரென்பவே. (சகூ)

வேறு.

ஆக்குவ தேதெனி லறத்தை யாக்குவ
போக்குவ தேதெனில் வெகுளி போக்குவ
நோக்குவ தேதெனின் ஞான நோக்குவ
காக்குவ தேதெனில் விரதங் காப்பவே. (ருo)

மாலு நான்முக னும்மதி சூடிப கண்ணுத றிண்டோண்மேற்
சேலை சூடிய சேகர வானவர் தானவ ரானலும்
மேலை வல்வினை துகளற விளக்கிய விளங்கொளி மணிச்சோதிக்
கோல முக்குடை யுடையவர்க் கல்லதென கைத்தலங் குவியாதே.

---

யிரண்டும் யசோதரன் என்பான் சரிதை கூறியவாறு. யசோதரன் அவந்தி நாட்டு உஞ்சையினிநகரத்தரசன்; இவன் மாவினற் கோழியுருவனைந்து அதனைக் காளிக்குப்பலிகொடுத்ததனுல் இவனும், இவனை இதுபுரிகவென்று தூண்டியதனுல் இவன் தாய் சந்திரமதியுங் கொலையுண்டு, பின்னரும் பின்னரும் பல இழிபிறப்பெய்தி அப்பிறப்புச்கடோறுங் கொல்லப்பட்டிழன்றனர் என்பது கதை. இதன் விரிவு யசோதரகாவியத்துட் காண்க.

சகூ. கிளை - பந்துமித்திரர்; "கிளையுற்றமாந்தர்" என்னும் விசேடணம், அவர் தம்கிளையுடன் கெட்டமை குறிக்கும். உரை - சரித்திரம்; உலோபு-உலோபம்; வடமொழியில் 'லுபு' என்பது பகுதி என்பர்: உலோபு என்பதனடியாக, பெரியாழ்வார் திருமொழியில், "எதுமுலோபாய் காணம்பி" என வினைவிகற்பம் வருதலுங் காண்க. 'பண்புக்குப் பண்பில்லையேனும் தன்னையாக்கினனை இருமையுங் கெடுத்தற்கொடுமைபற்றி லோபத்தைப் பாவி என்றார்: கொடியானைப் பாவி என்னும் வழக்குண்மையான்."

ருo. விரதம் - இல்லறத்தார்க்குரிய அனுகுணசிக்ஷாவிரதங்களும். துறவறத்தார்க்குரிய மகா விருதமுமாம்; இவற்றின் விரிவு சைன நூல்களிற் கண்டுகொள்க.

'மாலு நான்முகனும்'—இப்பாடல் சில பிரதிகளில் இறுதியிற்காணப்படுகிறது. சேலை - வஸ்திரம். சேகரவானவர்; வானவசேகரர்:—தேவசிரேஷ்டர். என்றவாறு.

முற்றும்.